

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சி, மிட்டணமல்லி பகுதியில் தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பில் ரூ.3.3 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்பட்ட புதிய 16 எம்விஎ மின் மாற்றியை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்திறந்துவைத்தார்.உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார், ஆவடி மாநகராட்சி ஆணையர் ரா.சரண்யா, உள்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவுபடி மாற்றுத்திறனாளிகள் பேரூராட்சி மன்ற நியமன உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ள மீஞ்சூர் ஊத்துக்கோட்டை ஆரணி ஆகிய பேரூராட்சி பகுதியை சார்ந்த புதிய உறுப்பினர்களை பிரேமா இளமதி, வெங்கடேசன், பாஸ்கர், ஆகியோரை திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் நேரில் சந்தித்து வாழ்த்தினார். உடன் அபிராமி குமரவேல், பி.முத்து, குமரவேல், ந.மோகன் ராஜ் , பா.து.தமிழரசன், கரிகாலன், யுவராஜ், மா.தீபன், உள்பட நிர்வாகிகள் உள்ளனர்.

### ச.பாலகிருஷ்ணன் நிகழ்ச்சி ஏற்பாடு! படப்பை ஆ.மனோகரன் தலைமை! திருமுடிவாக்கம் இ.மணி வரவேற்புரை!

# நந்தம்பாக்கம் ஊராட்சியில் வருடம் முழுவதும் மதிய உணவு வழங்கும் விழா!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைக்கிறார்!

காஞ்சிபுரம், நவ. 27 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் மத்திய - தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு நந்தம்பாக்கம் ஊராட்சியில் வருடம் முழுவதும் மதிய உணவு வழங்கிடும் “அனுதினமும் அன்னம் தரும் அன்பு கரம்” துவக்க விழா இன்று (27.11.2025 - வியாழக்கிழமை) பகல் 12 மணியளவில், நந்தம்பாக்கத்தில் துவக்கி வைக்கப்படுகிறது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர், ஒன்றிய கவுன்சிலர் ச.பாலகிருஷ்ணன் நிகழ்ச்சி ஏற்பாட்டினை செய்கிறார்.

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன் தலைமை வகிக்கிறார்.

குன்றத்தூர் மத்திய ஒன்றியப் பொறுப்பாளர் திருமுடிவாக்கம் இ.மணி வரவேற்புரை ஆற்றுகிறார்.

மு.சுப்பிரமணி, க.ஏழுமலை, மு.செல்வமணி, வாசுகி மகேஷ், வே.அரி, மா.பரிமேலழகன், கே.என்.சி.சத்தியமூர்த்தி, இ.விஸ்வநாதன், வ.நந்தகோபால், சி.பார்த்தசாரதி, மூ.ராஜேந்திரன், எஸ்.கர்ணன், குமுதா சுமன், டி. லோகநாதன், த.ஏழுமலை, என்.வாசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சியில் துவக்கி வைக்கிறார்.

நிகழ்ச்சியில் தொகுதி பார்வையாளர் மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், ஒன்றியக் குழு பெருந்தலைவர் சரஸ்வதி மனோகரன், ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியக் குழு துணை பெருந்தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம், சங்கீதா வேலு, பொன்.ரமேஷ் கவி, மலர்விழி தமிழ் அமுதன், கு.ஏழுமலை, லட்சுமி ஞானசேகரன், எஸ். வைரம், ஜி.ஏ.ராயப்பா, ம.ரேவதி, வி.எஸ். கோதண்டராமன், என். எஸ்.இளங்கோ, வி.நாளியப்பன், ஜீவிதா சுரேஷ், டி.ஏழுமலை, எஸ்.பி.சட்டர்ஜி, ஏ.ராஜன், எஸ்.எம். வெள்ளைச்சாமி, பி.கார்த்திக், எஸ்.மணிகண்டன், ஏ.முருகன், கே.ஆர்.ராஜா, கோ.வல்லத்தரசு, எஸ்.எஸ்.மாலிக் பாய், எம்.ஷேக் முகமது, கே.நவீன்குமார், ஜி.கார்த்திகேயன் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு

# திருவல்லிக்கேணி பகுதியில் உள்ள அனைத்து வட்டங்களில் கழகக் கொடியேற்றி அறுசுவை உணவு!

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு வழங்குகிறார்! ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் அறிக்கை!

சென்னை, நவ. 27 -

சென்னை மேற்கு மாவட்டம், திருவல்லிக்கேணி பகுதி தி.மு.க. சார்பில் இன்று (27.11.2025 - வியாழக்கிழமை) கழக இளைஞரணிச் செயலாளர், துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவல்லிக்கேணி பகுதியில் கழக கொடியோற்றி இனிப்பு மற்றும் அறுசுவை உணவு வழங்குதல், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு, எம்.சி. 27.11.2025 இன்று கழகக் கொடி ஏற்றி இனிப்பு வழங்குதல், 115 (அ) வட்ட ம் சோக்தாவுத் தெரு, வட்ட செயலாளர் கே.ஜி.செந்தில்குமார், 116 வது வட்டம் அயோத்தியா நகர் கொடியோற்றுதல் மற்றும் இனிப்பு வழங்குதல் வட்டச் செயலாளர் எஸ்.சசிகுமார், 116 (அ) வட்டம் பி.வி. நாயக்கன் தெரு, கொடியோற்றுதல் இனிப்பு வழங்குதல் வட்டச் செயலாளர் ஜெ.விஜயகுமார், 119 வது வட்டம் கொடியேற்றுதல் மற்றும் இனிப்பு வழங்குதல் மீர்சாகிப்பேட்டை மார்கெட் வட்டச் செயலாளர் க.வே. மோகன், 119 (அ) வட்டம் வி.எம்.தெரு, பெரியார் சிலை அருகில் கொடி யோற்றதல் மற்றும் இனிப்பு வழங்குதல் வட்டச் செயலாளர் கே.பிரபு, 120 வது வட்டம் முத்தைய்யா தெரு, கொடியோற்றுதல் இனிப்பு வழங்குதல் வட்டச் செயலாளர் ஐ.சி.எப்.எம்.சங்கர், 120 (அ) வட்டம் வி.ஆர்.பிள்ளை தெரு, கொடியோற்றுதல் இனிப்பு வழங்குதல் வட்டச் செயலாளர் என்.ரவி. 02.12.2025 அன்று 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு பிரியாணி வழங்குதல், இடம். ஜானிஜான் கான் 1வது தெரு, நிகழ்ச்சி ஏற்பாடு:திருவல்லிக்கேணி பகுதி சிறுபாண்மையினர் நலஉரிமை பிரிவு பகுதி அமைப்பாளர் ஏ.ரசாக் பாட்ஷா, 07.12.2025 அன்று 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு பிரியாணி வழங்குதல் 119 வது வட்டம், இடம்: பூரம் பிரகாசம் சாலை, நிகழ்ச்சி ஏற்பாடு க.வே.மோகன், 119 (அ) வட்டம், இடம்: வி. எம். தெரு, 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு பிரியாணி வழங்குதல் நிகழ்ச்சி ஏற்பாடு: வட்டச் செயலாளர் லைனர் கே.பிரபு, 120 (அ) வட்டம், இடம்: வி.ஆர். பிள்ளை தெரு, 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு பிரியாணி வழங்குதல், நிகழ்ச்சி ஏற்பாடு : வட்டச் செயலாளர் என்.ரவி, வர்த்தகர் அணி மாவட்ட அமைப்பாளர் ஏ.விஜயராஜ், 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு பிரியாணி வழங்குதல் இடம்: பல்லப்பன் தெரு.

07.12.2025 அன்று காலை 9.00 மணியளவில் மாநிலக் கல்லூரி மைதானத்தில் கிரிகெட்போட்டி நடைபெறும். முதல் பரிசு ரூ. 49,000/-, இரண்டாவது பரிசு ரூ. 20,000/-, மூன்றாவது பரிசு ரூ. 10,000/- நிகழ்ச்சி ஏற்பாடு: மாணவர் அணி பகுதி அமைப்பாளர் எம். ரத்தீஷ், 14.12.2025 அன்று 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு பிரியாணி வழங்குதல், இடம்: அயோத்தியா நகர், நிகழ்ச்சி ஏற்பாடு: 116 வது வட்டச் செயலாளர் எஸ். சசிகுமார், 116 (அ) 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு பிரியாணி வழங்குதல், இடம்: பி.வி.நாயக்கன் தெரு, நிகழ்ச்சி ஏற்பாடு: வட்டச் செயலாளர் ஜெ.விஜயகுமார், 115 (அ) வட்டம் 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு பிரியாணி வழங்குதல், இடம்: ஷேக்தாவுத் தெரு, நிகழ்ச்சி ஏற்பாடு : வட்டச் செயலாளர் கே.ஜி.செந்தில்குமார், 120 வது வட்டம் 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு பிரியாணி வழங்குதல், இடம்: செல்லம்மாள் தோட்டம், நிகழ்ச்சி ஏற்பாடு: வட்டச் செயலாளர் ஐ.சி.எப்.எம். சங்கர், ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு பிரியாணி வழங்குதல், நிகழ்ச்சி ஏற்பாடு: இ. இளம்பாரதி, இடம்: முனுசாமி நகர், பகுதி தி.மு.க. இளைஞர் அணி சார்பில் 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு பிரியாணி வழங்குதல் இடம்: தேவராஜ் தெரு, நிகழ்ச்சி ஏற்பாடு: இளைஞர் அணி அமைப்பாளர் என்.ஏ.சஜாத் நிகழ்ச்சி ஏற்பாடு செய்கிறார்.

மேலும், இந்நிகழ்ச்சியில் வீ.பி.பொன்னரசு, ஆர்.என். துரை, ஆர். சுபேர்கான், வி.என். ராஜன், ப.பிரகாஷ், ஏ.விஜயராஜ், இ.இளம்பாரதி, வே.கமலா செழியன், ரவி. ராஜ்குமார், எம்.கே. ஆனந்த், ம.தயாநிதி, கே.திருநாவுக்கரசு, சி.தினகரன், ரா.பத்மாவதி, எம். பிரேம்ராஜா, எம்.சங்கர், ஜெ.விஜயகுமார், க.வே. மோகன், என்.ரவி, கே. பிரபு, கே.ஜி.செந்தில்குமார், எஸ்.சசிக்குமார், எம்.கலில்ரகுமான், ஆர். சசிகுமார், வெ.சீனிவாசன், ஆர்.கஜேந்திரன், எஸ்.விஜயக்குமார், ஏ.பி.வேலு, ஆர்.ராஜ்குமார், எல்.துளசிராமன், வி.தினேஷ்குமார் மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கோட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு திருவல்லிக்கேணி பகுதிக் கழகச் செயலாளர் ஏ.ஆர். பி.எம்.காமராஜ் தெரிவித்துள்ளார்.

### அனைத்துக் கிளைகளிலும் நலஉதவிகள் வழங்கிக் கொண்டாட்டம்!

# குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில் நவ-27 இளைஞர் எழுச்சி நாள் விழா!

## ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம் நவ 26

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க மாவட்ட ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கிளைக்கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவருக்கும் ஒன்றிய செயலாளர் படைப்பை ஆ.மனோகரன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

27.11.2025 வியாழக்கிழமையன்று இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில் அடங்கியுள்ள அனைத்து கிளைகளிலும், கொடிகம்பங்கள் இருக்கின்ற கிளைகளில் கழக கொடியினை ஏற்றி கழக கொள்கைப்பரப்பும் பாடல்களை ஒளிப்பரப்புச் செய்து, அந்தந்த கிளைகளின் சார்பில் விளையாட்டு போட்டிகள் நடத்துதல், ஏழைகளுக்கு வேட்டி, சேலை, மாணவர்களுக்கு நோட்டுப்புத்தகம், மற்றும் அறுசுவை உணவு வழங்குதல் போன்ற நலத்திட்ட உதவிகளை வழங்கி, அனைத்து கிளைகளிலும் நிகழ்ச்சி யினை சிறப்பாக கொண்டாடிட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில் அடங்கிய 18 ஊராட்சியில் கிளை வாரியாக நவ 27 - இளைஞர் எழுச்சி நாள் விழாவை சிறப்புடன் கொண்டாடி ஏழை எளியோர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி பிறந்தநாள் விழாவை சிறப்புடன் கொண்டாடப்படுகிறது.

இவ்விழாவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர்குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன், மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், திருமதி. சரஸ்வதி மனோகரன், திருமுடிவாக்கம் ஏ.மணி, ஏ.வந்தேமாதரம், உமா மகேஸ்வரி வந்தேமாதரம், வ.நந்தகோபால், சி. பார்த்தசாரதி மூ.ராஜேந்திரன், எஸ்.கர்ணன் குமுதா சுமன் டி.லோகநாதன் த.ஏழுமலை என்.வாசு ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

எனவே இதில் மற்றும் இதில் ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கிளைக்கழக செயலாளர்கள், பாகநிலை முகவர்கள்(BLA2), பாக டிஜிட்டல் முகவர்கள் (BDA), உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### மேடவாக்கத்தில் உள்ள 12 வார்டுகளிலும் கழகக் கொடியேற்றி – அறுசுவை உணவுடன்

# 2000 நபர்களுக்கு நலஉதவிகள்! இன்று பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

## மேடவாக்கம் லோகேஸ்வரா நிகழ்ச்சி ஏற்பாடு! எஸ்.கோபு – எச்.டி.போஸ் – எஸ்.சுரேஷ் முன்னிலை!

சென்னை, நவ. 27 -

சென்னை தெற்கு மாவட்டம், புனித தோமையார் மலை தெற்கு ஒன்றியம், மேடவாக்கத்தில் துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா. சுப்பிரமணியன் அறிவிப் பின்படி, சட்டமன்ற உறுப்பினர் எஸ். அரவிந்த்ரமேஷ், ஒன்றிய கழகச் செயலாளர் ஜி. வெங்கடேசன், ஆலோசனைப்படி, மேடவாக்கத்தில் உள்ள அனைத்து வார்டுகளிலும் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர்.எஸ். லோகேஸ்வரா தலைமையில் ஊராட்சி மன்ற தலைவர் சிவ பூஷணம் ரவி, ஊராட்சி மன்ற துணைத் தலைவர் எஸ்.கோபு, ஒன்றியக் கழக துணைச் செயலாளர் எச்.டி.போஸ், கிளைக் கழகச் செயலாளர் எஸ். சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

1 வது வார்டில் வடக்கு பட்டு கிளைக் கழக பொறுப்பாளர் ஆர். வினோத்குமார், 2 வது வார்டில் கலைஞர் நகர் டி. சேட்டு, 3 வது வார்டில் ஏ.வி.எம்.முருகன், 4 வது வார்டில் எஸ்.சிவா, என். ரங்கா, 5 வது வார்டில் கே. ராஜேஷ், 6 வது வார்டில் சுந்தர்ராஜ், எம்.பி.ரமேஷ், 7 வது வார்டில் பழனி, 8 வது வார்டில் ஜி.லோகேஷ், 9 வது வார்டில் ரவி கேசவன், என்.மூர்த்தி, 10 வது மற்றும் 11 வது வார்டில் என்.பாஸ்கர், 12 வது வாட்டில் எஸ். சுரேஷ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

கழக இளைஞரணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மேடவாக்கத்தில் உள்ள அனைத்து வார்டுகளிலும் கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கி அறுசுவை உணவு உடன் 2000 நபர்களுக்கு நல திட்ட உதவிகள் எவர்சில்வர் பக்கெட் மற்றும் மேடவாக்கம் அரசு மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கும் நிகழ்ச்சி இன்று (27.11.2025 - வியாழக்கிழமை) காலை 8 மணி முதல் தொடர் நிகழ்ச்சியாக நடைபெற உள்ளது.

நிகழ்ச்சியை ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர்.எஸ். லோகேஷ்வரா ஏற்பாடு செய்துள்ளார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய கவுன்சிலர் கல்பனா சுரேஷ், வார்டு உறுப்பினர்கள் ஜே.கமலக்கண்ணன், என். நடராஜன், கே.ரவி கேசவன், ஜி.கோவிந்தராஜுலு, அம்மு கிருஷ்ணமூர்த்தி, கௌரி முருகன் ஆகியோர்கள் அனைத்து வார்டுகளிலும் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிறைவாக ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.கிஷோர், ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜி.லோகேஷ், ஒன்றிய வழக்கறிஞர் அணி டி.ஜஸ்டின் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### துணை முதல்வர் பிறந்த நாள் விழா! தாம்பரம் கிழக்குப் பகுதியில்

# 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு: அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்குகிறார்!

## எஸ்.ஆர்.ராஜா வசந்தகுமாரி கோ.காமராஜ் த.ஜெயக்குமார் பங்கேற்பு! ஆ.நடராஜன் எம்.சி. அறிக்கை!

காஞ்சிபுரம், நவ. 27

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், தாம்பரம் கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில் வரலாற்று இயக்கத்தின் இளம் தலைவர், துணை முதல்வர் உதயநிதி அவர்களின் பிறந்தநாள் விழா பகுதி முழுவதும் உள்ள கொடி கம்பங்களில் இன்று (27.11.2025 வியாழக்கிழமை) காலை 7 மணி முதல் கழகக் கொடியினை ஏற்றி ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

மேலும் பகுதி கழகத்தின் சார்பில் காலை 8 மணியளவில் 68 வது வட்டக் கழகத்தில் 1000 ஏழை, எளிய மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, தாம்பரம் மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், பம்மல் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் த.ஜெயக்குமார், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், சிறப்பு அழைப்பார்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இவ்வாறு பகுதிக் கழகச் செயலாளர் மாடம்பாக்கம் ஆ.நடராஜன் தெரிவித்துள்ளார்.




தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க திருவள்ளூர் நகராட்சியில் தேர்தல் அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் மாற்றுத்திறனாளி முரளி என்பவர் திருவள்ளூர் நகராட்சியில் நியமனம் நகர மன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார் அவரை நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன் மற்றும் நகர மன்ற துணை தலைவர் சி.சு.ரவிச்சந்திரன் மற்றும் கவுன்சிலர்கள் ஆகியோர் வாழ்த்தினார் உடன் நகராட்சி அதிகாரிகள் திமுக நிர்வாகிகள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மணப்பாறை இரா. வீராசாமி

### நவம்பர் 27 (2010)



மணப்பாறை நகரத்திற்குட்பட்ட வட்டக் கிளைக் கழகச் செயலாளராக பணியாற்றி, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

1986ல் மணப்பாறை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

மும்முனைப் போராட்டத்திலும் – இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் பங்கேற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.